**சுருக்கம்**

நகர் ஊரமைப்பு – நகர்ப்புற வளர்ச்சி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிப்பு நாள் 15.07.2014 (Development of Integrated Residential Neighbour-hood) ஒருங்கிணைந்த புறநகர குடியிருப்பு அபிவிருத்தி திட்டங்கள் கடம்பூர் கிராமத்தில் மேற்கொள்ளுதல் – சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அதிகாரம் அளித்தல் – ஆணை வெளியிடுதல்.

==========================================================================

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.3(1)]த்துறை**

**அரசாணை (நிலை) எண்.131** | **நாள் 09.09.2014,**
**ஐய வருடம் ஆவணி திங்கள்24,**
**திருவள்ளுவர் ஆண்டு 2045**

படிக்கப்பட்டது

1. தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களின் அறிக்கை, நாள் 15.07.2014
2. உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், அவர்களின் கடிதம் நே.மு.க.எண்.NTI/ 1547/13, நாள் 31.07.2014.
3. நகர் ஊரமைப்பு ஆணையரின் கடிதம் ந.க. எண்.15676/ 2014/எல்.ஏ.1, நாள் 28.8.2014.

= = = = =

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் 15.7.2014 அன்று வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையில் சென்னை பெருநகரப் பகுதிக்கான முதலாம் முழுமைத் திட்டத்தில் மறைமலை நகர் புதுநகர் திட்டம் ஒரு புதிய நகரமாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்டு 1915 ஏக்கர் பரப்பளவில் பல கட்டடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது எனவும், மறைமலை நகரைச் சுற்றியுள்ள பகுதியில் பெருகி வரும் வீட்டு மனைத் தேவையை கருத்திற்கொண்டு கடம்பூர் கிராமத்தில் உள்ள 222 ஏக்கர் நிலப்பரப்பை அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளுடன் தன்னிறைவு பெற்ற குடியிருப்பு பகுதியாக மாற்றி அமைக்க முடிவு செய்து அதற்கேற்ப இத்திட்டத்தின் கீழ் திறந்த வெளியிடம் பொது உபயோக பகுதிகள் மற்றும் சாலை பகுதிகளுடன் கூடிய உயர்தர வருவாய் பிரிவு மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த வருவாய் பிரிவு ஆகியோருக்கான குடியிருப்பு மனைகள் உருவாக்கப்படும் எனவும் கடம்பூர் கிராமத்தில் 58 ஏக்கர் பரப்பளவில் உள்ள ஒரு பெரிய ஏரியை நீர்நிலையாகவே நிலைநிறுத்தி அதைத் சுற்றியுள்ள பகுதிகளில் பொழுதுபோக்கு வசதிகளை அபிவிருத்தி செய்து சுற்றுசூழல் சமன்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழும உறுப்பினர்–செயலர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், கடம்பூர் கிராமம், நி.அ.எண்.1–ல் 222 ஏக்கர் பரப்பு அரசு காடு புறம்போக்கு நிலத்தை அபிவிருத்திகள் ஏற்படுத்தும் பொருட்டும் நி.அ.எண்.2, பெரிய ஏரியினை நீர்நிலையாக

நிலைநிறுத்தியும் நில உரிமை மாற்றம் (Allot and alienate) செய்திடுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது என்று தெரிவித்து, கடம்பூர் கிராமம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும எல்லைக்கு வெளியில் அமைந்தாலும் மேற்படி கிராமத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கிடவும், அபிவிருத்திகள் ஏற்படுத்திடவும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அதிகார ஒதுக்கீடு வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

**3.** காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்லைவர் தமது கடிதத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு வருவாய் நிலை ஆணை எண்.**24**–ன்படி நில உரிமை மாற்றம் செய்யப்படும் பரப்பு **102.65.0** எக்டேர் அல்லது **253.54** ஏக்கருக்கு மதிப்பு ரூ.**329,60,20,000** (முன்னூற்று இருபத்தி ஒன்பது கோடியே அறுபது இலட்சத்து இருபதாயிரம்) நில மதிப்பு மற்றும் இதர கட்டனங்களை வசூல் செய்து கொண்டும் பிரஸ்தாப நிலத்திற்கு நடுவில் உள்ள புல எண்.**2**–ல் **23.67.0** எக்டேரில் உள்ள பெரிய ஏரியினை எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யாமல் நீர்நிலைக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாத வண்ணம். ஏரியாகவே பராமரிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி **110**–ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டம் என்பதால் சிறப்பினமாக கருதி நிலஉரிமை மாற்றம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

**4.** நகர் ஊரமைப்பு ஆணையர், மேலே **3**–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110**–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம் என்பதால் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கோரிக்கை அடிப்படையிலும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை பேரிலும் கடம்பூர் கிராமம், சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதியின் எல்லைக்கு வெளியில் அமைந்தாலும் மேற்படி கிராமத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கிடவும் அவிவிருத்திகள் ஏற்படுத்திடவும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு கடம்பூர் கிராமம், காடு புறம்போக்கு நி.அ.எண்.**1/2 102.65.0** எக்டேர் (253.54 ஏக்கர்) பரப்புள்ள பகுதி மற்றும் அதில் அமைந்துள்ள **23.67.0** எக்டேர் (பெரிய ஏரி) நீர்நிலையாகவே நிலைநிறுத்தியும் நில உரிமை மாற்றம் மாவட்ட ஆட்சி தலைவரால் பரிந்துரைக்கப்பட்டதன் பேரிலும், மேற்காணும் அபிவிருத்திகளுக்கு அதிகார ஒதுக்கீடு (Power delegation) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு வழங்கப்படலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

**5.** அரசு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் செயற்குறிப்பினை ஆய்வு செய்து, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், **1971**–ன் பிரிவு **9**, உட்பிரிவு ண் உட்கூறு (VI)–ன் கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கடம்பூர் கிராமத்தில் உள்ளல் **222** ஏக்கர் நிலைப்பரப்பை அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் தன்னிறைவு பெற்ற குடியிருப்பு பகுதியாக மாற்றியமைக்க மனைப்பிரிவு மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கும் பணியினை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்படைக்கலாம் என்று முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மோகன் பியாரெ,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்,
சென்னை–**600 008.**

நகர் ஊரமைப்பு ஆணையர்,
சென்னை–600 002.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.
<u>நகல்:</u>-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–600 009.
அமைச்சர் (வீ.வ.(ம) ந.வ) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலரின் தனிச்செயலாளர்,
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை–600 009.
இருப்புகோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**